**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.113/2011** **Date : 15.10.2024**

**PW6 சுப்பிரமணியன் த/பெ. சோலைமுத்து**

**4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸ் மூலம் எனக்கு தபால் வந்தது. நான் ஜமீல் பாய்யிடம் நான்கெல்லை எழுதிக்கொடுத்தேன். ஜமீல் பாய்தான் எனக்கு தபாலை கொடுத்தார். போலீஸை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்து போலீஸ் கொடுத்தபோதுதான் நான் போலீஸை பார்த்தேன் என்றால் சரிதான். போலீஸ் தபாலை ஜமீல் பாய் என்னிடம் கொடுப்பதற்கு முன்பு இடத்தை பற்றி என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. அ.சா.ஆ.9 ஆவணத்தில் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கொடுக்கப்பட்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 9 சான்றை ஜமீல் பாய் கொடுத்த ரசீதின்படி நான் ஆவணங்களை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை பார்த்து நான்கெல்லை எழுதிக்கொடுத்தேன்.

ரசீதானது எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் கடிதம் ஜமீல் பாய் கொடுத்ததா என்று எனக்கு ஞாபகமில்லை. ஜமீல் பாய் என்னிடம் கொடுத்த கடிதத்தை நான் என்னுடைய அலுவலகத்தில் வைத்துக்கொண்டேனா அல்லது ஜமீல் பாயிடம் கொடுத்துவிட்டேனா என்றால் ஞாபகமில்லை. 02.05.2010 அன்று நான் கடிதம் கொடுத்தேன். நான் கொடுத்த கடிதத்தில் எந்த ஆவணத்தை பார்த்து

நான்கெல்லை எழுதிக்கொடுத்தேன் என்று குறிப்பில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.